சய்தி வெளியீடு எண்: 287/2018 நாள் : 20.05.2018

**வேலூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலைக்கு சாலை வசதிகளை மேம்படுத்திட நடவடிக்கைகள் வருங்காலங்களில் படிபடியாக மேற்கொள்ளப்படும் ஏலகிரி கோடை விழா நிறைவு நிகழ்சியில் பல்வேறு பரிசுகளை வழங்கி மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் பேச்சு!!**

வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் ஏலகிரி மலையில் 19.05.2018 மற்றும் 20.05.2018 சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் ஏலகிரி கோடை விழா 2018 நடைபெற்று சிறப்புடன் நிறைவுபெற்றது. இந்த நிறைவு விழா நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

இவ்விழாவிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெ.பெரியசாமி அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் ஏலகிரி மலையில் 19.05.2018 மற்றும் 20.05.2018 சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளில் ஏலகிரி கோடை விழா 2018 நடைபெற்று சிறப்புடன் நிறைவடைகிறது. ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் ஏலகிரியில் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருவதற்கு காரணம் இதுபோன்ற விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுவதேயாகும். கடந்த 7 வருடங்களுக்கு மேலாக ஏலகிரியில் கோடை விழா சிறப்பாக நடைப்பெறுவதற்கும் இந்த விழா சிறப்புடன் நடைப்பெற பெரும் உதவியாக இருந்த மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களுக்கும் அவருடன் உறுதுணையாக இருக்கும் நபர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரண்டு நாட்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சிறப்பாக கோடைவிழாவிற்கு வருகை தந்து கண்டுகளித்தனர். ஏலகிரி கோடைவிழாவிற்காக சுற்றுலா பயணிகளின் வசதிக்காக பேருந்து, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகளை சிறப்பாக ஏற்பாடு செய்த அலுவலர்களுக்கும் அரங்குகளை அமைத்த மகளிர் சுயயுதவிக்குழுக்களுக்கும் அனைத்து அரசுத்துறை அலுவலர்களுக்கும் குறிப்பாக உள்ளாட்சி துறை அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு மறைந்த தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அருளாசியோடு வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஒன்றியம் ஏழைகளின் ஊட்டி என்றழைக்கப்படும் கோடை வாசஸ்தலமான ஏலகிரி மலையில் 2018 க்கான கோடைவிழா இரண்டு நாட்கள் நடத்தப்பட்டு இன்று சிறப்பாக முடிவடைகிறது. இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் இந்த கோடைவிழாவிற்கு வருகை தரும் சுற்றுலா பொதுமக்களை மகிழ்ச்சியுடன் கோடைவிழா கண்டுகளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்படுகிறது. சென்னை பெங்களூர் மற்றும் இப்பகுதி மக்கள் பெருமளவில் வந்து இந்த கோடைவிழாவினை கண்டுக்களித்தனர். மற்ற புகழ் பெற்ற சுற்றுலா தலங்களுக்கு இணையாக ஏலகிரி மலை வளாச்சியடைந்து வருகிறது என்பது மக்களின் வருகையில் தெரிகிறது. பள்ளி மற்றும் கல்லூரிகளின் விடுமுறை நாட்களில் இந்த வருடம் கோடைவிழா நடத்தியது மிகவும் மக்களுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது. ஏலகிரி மலைக்கு மக்கள் விரைவாக வந்து செல்ல சாலை வசதிகள் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மலை அடிவாரம் முதல் பொன்னேரி வரை 4 கிலோ மீட்டர் நீளம் நான்கு வழி சாலையாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மலை பாதையை விரிவுப்படுத்திடவும் வரும் காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இந்த கோடை விழா சிறப்பாக நடைப்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால்

அனைத்துத்துறை அலுவலர்களையும் ஒருங்கிணைத்து இவ்வளவு சிறப்பாக நடத்தப்பட்டது அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். கோடைவிழாவில் பல்வேறு துறைகளின் சார்பாக பல்துறை கண்காட்சிகள் வெகுசிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அரங்குகள் அமைத்த அனைத்து துறை அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இவ்விழாவிற்கு பாதுகாப்பு வசதிகளை வழங்கி காவல் துறையினருக்கும், போக்குவரத்து வசதிகளை வழங்கிய போக்குவரத்து துறையினருக்கும், சுகாதார வசதிகளை வழங்கிய சுகாதார துறையினருக்கம், மேலும் வருவாய்த்துறை, உள்ளாட்சித்துறை நகராட்சித்நிர்வாகத்தினா் மற்றும் அனைத்து துறையினருக்கம் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக கோடைவிழா ஒரு வெற்றிவிழாகாக மாற்றிட்ட சுற்றுலா பயணிகளுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என்று மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சா் திரு.கே.சி.வீரமணி அவா்கள் விழாவில் பேசினாா்.

கோடைவிழாவில் கலைபண்பாட்டு துறையின் சார்பாக மாவட்ட கலை விருதுகள் கலை இளமணி, கலை வளா்மணி, கலை சுடா்மணி, கலை நன்மணி, கலை முதுமணி விருதுகள் 10 நபா்களுக்கு விருது பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் ரூ.55 ஆயிரம் காசோலைகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சா் அவா்கள் வழங்கினாா.

மேலும் சிறப்பாக பல்துறை அரங்குகள் அமைத்த அரங்குகளில் வேளாண்மைத்துறைக்கு முதல்பரிசையும், பொதுசுகாதாரத்துறைக்கு இரண்டாம் பரிசையும், மகளிா் திட்ட துறைக்கு மூன்றாம் பரிசையும், மாவட்ட தொழில் மையத்திற்கு சிறப்புபரிசையும், மேலும் விளையாட்டு துறை சாா்பாக நடத்தப்பட்டு மராத்தான் போட்டி, கயிறு இழுக்கும் போட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் பரிசுகளையும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளா்ச்சி மூலம் நடத்தப்பட்ட கொழுகொழு குழந்தைகள் போட்டியில் வெற்றி பெற்றவா்களுக்கு பரிசுகளையும், நாய் கண்காட்சியில் வெற்றி நாய்களுக்கு பரிசுகளையும் கோடைவிழாவிற்காக பணியாற்றிய அனைத்துத்துறை அலுவலா்களுக்கும் நினைவு பரிசுகளையும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சா் திரு.கே.சி.வீரமணி அவா்கள் வழங்கி பாராட்டினாா்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலா் திரு.தா.செங்கோட்டையன், திருப்பத்தூா் சாா் ஆட்சியா் திரு.கா.பிரியங்கா, இ.ஆ.ப., அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினா்கள் திரு.சு.இரவி, வேலூா் - திருவண்ணாமலை ஆவின் தலைவா் திரு.த.வேலழகன், முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவா் திரு.ஆா்.ரமேஷ், மகளிா் திட்ட இயக்குநா் திரு.சிவராமன், ஊரக வளா்ச்சி செயற்பொறியாளா்கள் திரு.ராஜவேலு, இணை இயக்குநா் (கால்நடை) மரு.அா்த்தநாாி, இணை இயக்குநா் வேளாண்மை திருமதி.சுப்புலட்சுமி, துணை இயக்குநா்கள் (சுகாதாரம்) மரு.தேவபாா்த்தசாரதி, தோட்டக்லைத்துறை திருமதி.பொன்னு. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளா் திரு.ரமேஷ், உதவி இயக்குநா் ஊராட்சிகள் திரு.பிரேம்குமாா், மாவட்ட விளையாட்டு அலுவலா் திரு.ரமேஷ், ஒருங்கிணைந்த குழந்தை வளா்ச்சித் திட்ட அலுவலா் (பொ) திருமதி.சாந்தி, வட்டார மருத்துவ அலுவலா் மரு.சுமதி, வட்டார போக்குவரத்து அலுவலா் திரு.மோகன், வட்டார வளா்ச்சி அலுவலா்கள் திரு.இளவரசன். திரு.அன்பரசன், வன காப்பாளா் திரு.அன்பரசன், மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலா்கள் கலந்துகொண்டனா்.

இவ்விழாவில் மக்கள் தொடா்பு அலுவலா் திரு.ச.இளங்கோ அவா்கள் வரவேற்புரையாற்றினாா்.

இவ்விழாவில் மாவட்ட சுற்றுலா அலுவலா் திரு.வின்செனட் ஜான் பிரிட்டோ அவா்கள் நன்றியுரையாற்றினாா்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம் வேலூா்-9.